கொடைக்கானல் நகராட்சி

2019ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28ம் நாள் (28.02.2019) வியாழக்கிழமை பிற்பகல் 5.00 மணிக்கு கொடைக்கானல் நகராட்சி நகர்மன்றக் கூடத்தில் தனி அலுவலர் தலைமையில் நடைபெறும் அவசரக் கூட்டம்.

முன்னிலை: ரா.முருகேசன், எம்.ஏ., எம்.பில்., பி.எல்., டி.பி.எம்.,
தனி அலுவலர்.

1) கொடைக்கானல் நகராட்சி ஆணையாளர், திரு.ரா.முருகேசன் அவர்களின் ஜனவரி–2019ம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம். (ந.க.எண்.632/2018/சி1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **593, நாள்.28.02.2019.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **பதிவு செய்யப்படுகிறது.** |

*******

2) இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் துப்புரவு பணிக்காக பயன்படுத்தப்பட்டு வரும் லெமன் கிராஸ் இருப்பு குறைவாக உள்ளது. எதிர்வரும் ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் கோடை சீசன் ஆரம்பமாக உள்ளதால் சுற்றுலா பயணிகளின் வரகையும் அதிகமாக இருக்கும் என்பதால் கிருமிநாசினியான வாசனை திரவியங்கள் தேவைப்படுகிறது.

எனவே, நகர் பகுதிகளிலுள்ள பேருந்து நிறுத்தங்கள், பேருந்து நிலையம் பொதுக் கழிப்பிடங்கள் மற்றும் பொது மக்கள் அதிகம் கூடுமிடங்கள் சுற்றுலா பயணிகள் அதிகம் கூடுமிடங்களை தொடர்ந்து தூய்மையாக பராமரிக்க வேண்டியுள்ளது. இந்நகராட்சிக்கு 2019–2020ம் ஆண்டிற்கு 350 லிட்டர் லெமன் கிராஸ் ஆயில் வாங்கி வழங்குமாறு துப்புரவு ஆய்வாளர்கள் குறிப்பு அளித்துள்ளார்கள். இதன் பேரில் 350 லிட்டர் லெமன் கிராஸ் ஆயில் வாங்கி வழங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.9,90,000/– (ரூபாய் ஒன்பது இலட்சத்து தொன்னூறாயிரம் மட்டும்) வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) பொது சுகாதார நலன் கருதி மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1051/2018/எச்.1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **594, நாள்.28.02.2019.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

3) கொடைக்கானல் நகராட்சியின் பொலிரோ வாகனம் TN 57 AS 0817 வாகனத்தின் சர்வீஸ் பணிகள் மதுரை TVS பணிமனையில் மேற்கொள்ள நகர்மன்றத் தீர்மானம் எண். 571 நாள். 31.01.2019 –ல் ரூ.17,000/– க்கு மன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது. இவ்வாகனம் மதுரை TVS பணிமனையில் சர்வீஸ் மேற்கொள்ளப்பட்டவகையில் பணிமனையின் பட்டியல் ( பட்டியல் எண். R019M009115 நாள் 14.02.2019) ன் படி தொகை ரூ. 35662/– க்கு பெறப்பட்டுள்ளது. எனவே, கூடுதல் தொகை ரூ. 18662/– ( ரூபாய்

பதினெட்டாயிரத்து ஆறுநூற்று அறுபத்து இரண்டு மட்டும் ) மதுரை TVS பணிமனைக்கு வழஙகிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு. அனுமதிக்கலாம். ( கோப்பு ந.க.எண். 333/2013/இ1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **595, நாள்.28.02.2019.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

4) இந்நகராட்சிக்குட்பட்ட அண்ணாசாலையில் ஒட்டியுள்ள முதலியார்புரம் முதல் தெருவில் நகராட்சியால் புதிதாக கட்டப்பட்டுள்ள தண்ணீர் தொட்டியின் கீழ் பகுதியில் கடை எண்.2ன் பயன்பாட்டு உரிமத்திற்கு 13.02.2019ம் தேதி பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதற்கு கீழ் காணும் விபரத்திற்கு கலந்து கொண்டவர்களின் பட்டியல்.

| வ. எண் | குத்தகை இனம் | பொது ஏலம் கோரியவர்கள் | ஒப்பந்தப்புள்ளி கோரியவர் | மாதம் ஒன்றுக்கு வாடகை தொகை ரூ. |
|---|---|---|---|---|
| | அண்ணாசாலையில் ஒட்டியுள்ள முதலியார்புரம் முதல் தெருவில் நகராட்சியால் புதிதாக கட்டப்பட்டுள்ள தண்ணீர் தொட்டியின் கீழ்பகுதியில் கடை எண்.2 பயன்பாட்டு உரிமம். | திரு.K.செந்தில் குமார், த/பெ. M.கிருஷ்ணன், 98/398 A, 1 A, அன்னை தெரசா நகர், பர்ன்ஹில் ரோடு, கொடைக்கானல். | ஒப்பந்தப்புள்ளியில் எவரும் கலந்து கொள்ளவில்லை. | ரூ.7,375/– |
| | | திரு.கிருஷ்ணபிரசாத், த/பெ. K.செந்தில் குமார், ஆனந்தகிரி 4வது தெரு, கொடைக்கானல். | | ரூ.7,400/– |

மேற்கண்ட விபரத்திற்கு வரப்பெற்ற இரண்டு ஏலக்கேள்விகளில் கூடுதல் தொகை ரூ.7400/–க்கு திரு. கிருஷ்ணபிரசாத், த/பெ. K.செந்தில் குமார் என்பவர் உயர்ந்தபட்ச ஏலக் கேள்வியாக கோரியுள்ளார். மேலும், ஒப்பந்தப்புள்ளிக்கு கலந்து கொள்ள யாரும் முன்வரவில்லை. மேற்கண்ட விபரத்திற்கு வரப்பெற்ற ஏலக் கேள்வி குறித்து மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: நகராட்சி கடையின் குத்தகை உரிமத்திற்கு உயர்ந்தபட்ச ஏலத் தொகை கோரிய திரு. கிருஷ்ணபிரசாத், த/பெ. K.செந்தில் குமார் என்பவரின் ஏலத் தொகையினை ரூ.7400/–ஐ ஏற்க மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1759/2017/A3).

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **596, நாள்.28.02.2019.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்படுகிறது.** |

*******

5) கொடைக்கானல் நகராட்சியில் பொது நிதியின் கீழ் கீழ்க்கண்ட பணியினை மேற்கொள்வதற்கு நகர்மனறத் தீர்மானம் எண்கள் 558, 559, 538, 537,536, 556, 563,566,561, 540, 562, 565 மற்றும் 564 நாள் 28.12.2018, 23.11.2018 மற்றும் 31.1.2019 ல் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. அதன்படி இப்பணியினை மேற்கொள்வதற்கு 20.02.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பீட்டு அட்டவணை மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு இலட்சத்தில் | ஒப்பந்தக்காரரின் பெயர் ( திருவாளர்கள் ) | ஒப்பந்த சதவீதம் (மதிப்பீடு விகிதத்திற்கு ) |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| கல்வி நிதி | | | | |
| 1 | அப்சர்வேட்டரி நகராட்சி துவக்கப் | 2.80 | திரு ஜி.ஸ்ரீதர் | 0.14% குறைவு |

| | | | | |
|---|---|---|---|---|
| | பள்ளியில் மராமத்து பணிகள் மேற்கொள்ளுதல் | | திரு.எம்.ஆர். பிலால் இப்ராஉறிம் | 8.21% அதிகம் |
| 2 | ஆனந்தகிரி நகராட்சி துவக்கப் பள்ளியில் மராமத்து பணிகள் மேற்கொள்ளுதல் | 6.20 | திரு ஜி.ஶ்ரீதர்<br><br>திரு.எம்.ஆர். பிலால் இப்ராஉறிம் | 0.68% குறைவு<br><br>7.32% அதிகம் |
| வருவாய் நிதி 2018–2019 | | | | |
| 3 | நாயுடுபுரம் பேருந்து நிறுத்தம் முதல் பாக்கியபுரம் சந்திப்பு வரை மழை நீர் வாய்க்கால் மற்றும் சாலை அமைத்தல் | 9.50 | திருமதி என். சரஸ்வதி<br><br>திரு. பி. சுப்பிரமணி | 0.09% குறைவு<br><br>0.07% அதிகம் |
| 4 | அண்ணாசாலை நடைபாதையியில் சேதமடைந்துள்ள நடைபாதை மற்றும் கம்பி தடுப்பினை சரி செய்தல் | 7.45 | திரு.எம்.என். சலாமத்<br><br>திரு எம்.ஆர். பிலால் இப்ராஉறிம் | 0.63% குறைவு<br><br>1.65% அதிகம் |
| 5 | கல்லுக்குழி பகுதியில் சிறுபாலம் மற்றும் சாலை பழுதினை சீரமைத்தல் | 3.20 | திரு.எம்.என். சலாமத்<br><br>திரு எம்.ஆர். பிலால் இப்ராஉறிம் | 0.12% குறைவு<br><br>0.38% அதிகம் |
| 6 | திடக்கழிவு மேலாண்மை பணிக்கு 10 எண்ணம் டம்பர் பிளேசர் பின் மற்றும் 10 எண்ணம் 240 லிட்டர் கொள்ளவு கொண்ட Wheel Dust Bin சப்ளை செய்தல் | 10.00 | M/s. S.R.Enterprises. Chennai<br><br>M/s. Rajeshwari ( Nathan Chemical Traders) | மதிப்பீட்டு விகிதம்<br><br>4.28% அதிகம் |
| 7 | கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான பார்க் வியு பங்களா பகுதியில் பாதுகாப்பு சுவர் அமைத்தல் மற்றும் வாகனம் நிறுத்தும் அறையில் மராமத்து பணிகள் மேற்கொள்ளுதல் | 8.30 | திரு எல்.ஜான் எபிநேசர்<br><br>திரு கே.சையது | 0.65% குறைவு<br><br>0.88% அதிகம் |
| 8 | கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான பார்க்வியு சாலை, உட்வில் சாலையில் சேதடைந்த சாலை பகுதியினை பேட்ஜ் ஒர்க் செய்தல் | 5.90 | திரு.பி. அரசகுமார்<br><br>திரு ஜி. சிவக்குமார் | 0.13% குறைவு<br><br>2.18% அதிகம் |
| 9 | கொடைக்கானல் நகராட்சி குப்பை கிடங்கிற்கு குப்பைகளை சிப்பமாக்கிட Hydralic Baling Mechine சப்ளை செய்தல் | 5.00 | திரு .பி. சர்தார் பாட்சா மாடன் இன்ஜினியரிங ஒர்க்ஸ், புதுக்கோட்டை<br><br>திரு உறக்கீம்முல்லா புதுக்கோட்டை | மதிப்பீட்டு விகிதம்<br><br>4.24% அதிகம் |
| குடிநீர் கணக்கு நிதி 2018–21019 | | | | |
| 10 | கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான தரைமட்ட குடிநீர் தொட்டிகள், மேல்நிலை தொட்டிகள் மற்றும் ஜிம்கானா கிணறு பகுதியில் மராமத்து பணிகள் மேற்கொள்ளுதல் | 3.60 | மெசர்ஸ். எஸ்.வி. இராணிதங்கம் கன்ஸ்ட்ரக்சன்ஸ்<br><br>திரு ஜி. அங்கப்பன் | 0.69% குறைவு<br><br>0.87% அதிகம் |
| 11 | கொடைக்கானல் நகராட்சி பொறியியல் பிரிவிற்கு தேவையான குடிநீர் உதிரி பொருட்கள் சப்ளை செய்தல் | 9.85 | திரு எம்.கென்னடி<br><br>திரு பி.சுப்பிரமணி | 0.05% குறைவு<br><br>0.33% அதிகம் |
| 12 | செல்லபுரம் தடுப்பணை முதல் அப்சர்வேட்டரி குடிநீர் தொட்டிவரை கஜா புயலினால் சேதடைந்த 6 இன்ஞ்ச் குடிநீர் விநியோக குழாய்களை பில்லர் அமைத்து சரி செய்தல் | 3.80 | திரு எம்.கென்னடி<br><br>திரு பி.சுப்பிரமணி | 0.09% குறைவு<br><br>0.06% அதிகம் |
| 13 | கல்லுக்குழி மற்றும் பில்டிங சொசைட்டி ஆழ்துளை கிணற்றில் பழுதடைந்த மின் இணைப்புகளை சரி செய்தல் | 0.60 | திரு எம்.கென்னடி<br><br>திரு பி.சுப்பிரமணி | 0.35% குறைவு<br><br>0.24% அதிகம் |
| 14 | நகராட்சி வளாகத்தின் 8 இடங்களில் கண்காணிப்பு கேமராக்கள் அமைத்தல் | 1.50 | M/s. Master Safety, Theni<br><br>M/s.Mars Weighing System & Service, Theni | மதிப்பீட்டு விகிதம்<br><br>7.03% அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 15 | கொடைக்கானல் நகராட்சி அலுவலகத்தில் உள் அழைப்பு தொலைபேசி 24 இணைப்புகள் கொண்ட EPABX SYSTEM அமைத்தல் | 1.10 | M/s. Madura Electronics, Madurai<br><br>M/s.P.K.Technologies, Madurai | மதிப்பீட்டு விகிதம்<br><br>5.08% அதிகம் |
| 16 | பேருந்து நிலைய நுழைவு வாயில் கேட் மற்றும் வெளியுற கேட் பழுதுதினை சரி செய்து பொருத்துதல் | 0.50 | ஒப்பந்தப்புள்ளி ஏதும் பெறப்படவில்லை. | |
| 17 | கொடைக்கானல் நகராட்சி படகுகளை மராமத்து செய்து வர்ணம் பூசி புதுப்பித்தல் மற்றும் படகு குழாமின் படகு நிறுத்த பகுதியினை ( Landing Area) மேம்படுத்துதல் | 10.00 | பி. முரளி<br><br>எம்.ஆர்.பிலால் இப்ராஉறிம் | 0.10% குறைவு<br><br>0.34% அதிகம் |
| 18 | பேருந்து நிலையத்தில் மராமத்து பணிகள் செய்தல் மற்றும் இருக்கைகள் பழுது பார்த்தல் மற்றும் பேருந்து நிலையத்தில் வர்ணம் பூசுதல் | 3.00 | திருமதி என். சரஸ்வதி<br><br>திரு பி. சுப்பிரமணி | 0.12% குறைவு<br><br>0.58% அதிகம் |

அலுவலக குறிப்பு. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **597, நாள்.28.02.2019.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அலுவலக குறிப்பு ஏற்கப்படுகிறது.** |

6) கொடைக்கானல் நகராட்சியில் வார்டு.பி, பிளாக்.5, நகரளவு எண்.25, கே.ஆர்.ஆர்.கலையரங்க வளாகத்தில் யாத்திரி நிவாஸ் அமைத்திட விருப்பம் கோரும் ஒப்பந்தப்புள்ளி கோரிய அறிவிப்பினை மாநில அளவிலான நாளிதழில் அறிவிப்பு செய்த வகையில் நாளிதழ் கட்டணமாக கீழ்க்கண்ட விவரப்படி பட்டியல் தொகை செலுத்தக் கோரி பட்டியல் பெறப்பட்டுள்ளது. (Request for Proposal RPF)

| வ. எண் | பணியின் விபரம் | விளம்பர நிறுவனத்தின் விபரம் | பட்டியல் எண் மற்றும் நாள் | தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | கே.ஆர்.ஆர்.கலையரங்க வளாகத்தில் யாத்ரி நிவாஸ் அமைத்தல் பணி | Bright Advertising Cehnnai. (Deccan Chronicle, Dinamalar, dated:15.01.2019) State Level. | 6167, dated.17.01.2019 | 50,450/– |

மேற்கண்ட தொகையினை நாளிதழ் நிறுவனத்திற்கு வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: அனுமதிக்கலாம் (ந.க.எண்.2855/2018/இ1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **598, நாள்.28.02.2019.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

7) கொடைக்கானல் நகராட்சியில் குடிநீர் பணி மற்றும் தெருவிளக்கு பணியில் பயன்படுத்தப்பட்ட தற்போது பயன்படுத்த இயலாத பழைய பொருட்களை பொது ஏலம் மூலம் கழிவு செய்து அறிக்கை சமர்ப்பித்திட நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களின் 07.02.2019ம் தேதிய ஆய்வு கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, இந்நகராட்சியில் உள்ள குடிநீர் பணி மற்றும் தெருவிளக்கு பணியில் பயன்படுத்தப்பட்ட தற்போது பயன்படுத்த இயலாத பழைய பொருட்களை பொது ஏலம் மூலம் கழிவு செய்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: அனுமதிக்கலாம் (ந.க.எண்.318/2019/இ1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **599, நாள்.28.02.2019.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

8) கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான TN57 AS 0817 பொலிரோ வாகனத்தின் நான்கு டயர்கள் கடந்த 26.9.2017ம் தேதியன்று வாங்கப்பட்டுள்ளது. இந்த டயர்கள் மாற்றப்பட்டு இதுநாள்வரை 45,000 கி.மீட்டருக்கு மேல் ஓடியுள்ளது. மேற்கொண்டு இந்த டயர்களை கொண்டு வாகனத்தினை இயக்க முடியாத சூழ்நிலை உள்ளது. எனவே, இவ்வானத்திற்கு புதிய நான்கு டயர்கள் MRF நிறுவனம் திண்டுக்கல்லில் வாங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. இதற்காகும் உத்தேச செலவுத் தொகை ரூ. 23,000/– ( ரூபாய் இருபத்து மூன்றாயிரம் மட்டும் ) ஆகும்.

அலுவலக குறிப்பு. அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **600, நாள்.28.02.2019.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

9) மாவட்ட ஆட்சித் தலைவர், திண்டுக்கல் அவர்களின் 11.01.2019 ம் தேதிய நேரடி அறிவுரையில், கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான வெள்ளி நீர் வீழ்ச்சி பகுதியில் உள்ள பூங்காவினை அழகுபடுத்தி புதுப்பித்து பொதுமக்கள் மற்றும் சுற்றுலா பயணிகளின் பயன்பாட்டிற்கு கொண்டு வர தெரிவித்துள்ளார். அதன்படி கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்வதற்கு திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறை ஆணைகள் ந.க.எண்.980/2019/ஊ.வ.7 நாள். 08.02.2019 ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது.

| வ. எண். | திட்டத்தின் பெயர் | பணியின் விபரம் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் |
|---|---|---|---|
| 1 | சுங்க நிதி 2018–2019 | வெள்ளி நீர் வீழ்ச்சி வடியும் தடாகப் பகுதியை ஒட்டியுள்ள சாலையோர தடுப்புச் சுவர்களைப் பலப்படுத்தி சீரமைத்தல் | 10.00 |
| 2 | சுற்றுலா வளர்ச்சி, சேமிப்பு நிதி | வெள்ளி நீழ் வீழ்ச்சி இருபுறமும் S.S கிரில் பொருத்தி பூங்கா அமைக்கும் பணி | 10.00 |

இதில் வரிசை எண். 2ல் காணும் பணிக்கு சுற்றுலா வளர்ச்சி , சேமிப்பு நிதியிலிருந்து ரூ. 8,74,000/– போக மீதத் தொகை ரூ. 1,26,000/–யை நகராட்சி பொது நிதியிலிருந்தும் மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி இப்பணியினை மேற்கொள்வதற்கு 28.02.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பீட்டு அட்டவணை மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு இலட்சத்தில் | ஒப்பந்தக்காரரின் பெயர் ( திருவாளர்கள் ) | ஒப்பந்த சதவீதம் (மதிப்பீடு விகிதத்திற்கு) |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| சுங்க நிதி 2018–2019 | | | | |
| 1 | வெள்ளி நீர் வீழ்ச்சி வடியும் தடாகப் பகுதியை ஒட்டியுள்ள சாலையோர தடுப்புச் சுவர்களைப் பலப்படுத்தி சீரமைத்தல் | 10.00 | M/s.சரவணா இன்ஜினியரிங ஒர்க்ஸ், திண்டுக்கல் | 0.04% குறைவு |
| | | | M/s. இமயம் டிரேடர்ஸ், நாகப்பட்டினம் | 0.07% அதிகம் |
| சுற்றுலா வளர்ச்சி, சேமிப்பு நிதி | | | | |
| 2 | வெள்ளி நீழ் வீழ்ச்சி இருபுறமும் S.S கிரில் பொருத்தி பூங்கா அமைக்கும் பணி | 10.00 | M/s.சரவணா இன்ஜினியரிங ஒர்க்ஸ், திண்டுக்கல் | 0.08% குறைவு |
| | | | M/s. இமயம் டிரேடர்ஸ், நாகப்பட்டினம் | 0.35% அதிகம் |

அலுவலக குறிப்பு. 1) வரிசை எண். 2ல் காணும் பணிக்கு ஒதுக்கீடு போக மீதத்தொகையினை பொது நிதியின் மூலம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

2) வரிசை எண். 1 மற்றும் 2 ல் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகள் கொடுத்துள்ள M/s.சரவணா இன்ஜினியரிங ஒர்க்ஸ், திண்டுக்கல் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம். (ந.க.எண்.0086/2019/இ1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **601, நாள்.28.02.2019.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அலுவலகக் குறிப்பு ஏற்கப்படுகிறது.** |

*******

10) இந்நகராட்சியில் 2018–19ம் ஆண்டிற்கு வறுமை கோட்டிற்கு கீழ் வாழும் ஏழை குடும்பவங்களுக்கு அரசால் ஒரு முறை சிறப்பு நிதியுதவி வழங்கும் திட்டம் தொடர்பாக குடும்பங்களின் விவரங்கள் உரிய விண்ணபத்தில் கணக்கெடுப்பு பணி மேற்கொண்டு அவற்றை கணினி மூலம் இணையதளத்தில் உள்ளீடு செய்யும் பணி மேற்கொள்ளுமாறு தமிழக அரசால் கேட்டுக் கொள்ளப்பட்டது. இதன் விபரத்திற்கு கணக்கெடுப்பு பணி மேற்கொள்ள தேவையான விண்ணப்ப படிவங்கள் அச்சடித்து வாங்கி உரிய விண்ணபத்தில் கணக்கெடுத்து குடும்ப விபரங்களை கணினி மூலம் இணையதளத்தில் உள்ளீடு செய்ய வேண்டியுள்ளது. இத்திட்டத்தை செயல்படுத்த கணக்கெடுப்பாளர்கள் மற்றும் விபரங்கள் உள்ளீடு செய்யும் கணினி இயக்குபவர்களை பயன்படுத்தி இப்பணிகளை செய்து முடிக்க வேண்டியுள்ளது.

மேற்கண்ட விபரத்திற்கு விண்ணபங்கள் அச்சடித்து வாங்குவதற்கும் குடும்ப விபரங்களை சேகரிப்பதற்கு கணக்கெடுப்பு பணி மேற்கொள்வதற்கும் அதற்கான விபரங்களை கணினியில் உள்ளீடு செய்வதற்கும் ஏற்படும் உத்தேச செலவினம் ரூ.1,00,000/– (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) ஆகும். மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: தமிழக அரசின் திட்டமான வறுமை கோட்டிற்கு கீழ் வாழும் ஏழை குடும்பங்களுக்கு சிறப்பு நிதியுதவி திட்டத்தின் கீழ் ரூ.2000/–வழங்கும் பணிக்கு விபரங்கள் சேகரித்து கணினியில் உள்ளீடு செய்யும் பணியை உடனடியாக செயல்படுத்தப்பட வேண்டியதன் அவசர அவசியத்தை முன்னிட்டு அதற்கான உத்தேச செலவினம் ரூ.1,00,000/–ஐ வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.3859/2018/எச்.1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **602, நாள்.28.02.2019.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

11) பொது சுகாதாரப்பிரிவு குப்பைத்தொட்டி அகற்றும் வாகனம் TN-57-W-9634 க்கு தகுதிச்சான்று பணிகள் மேற்கொள்ளுதல் தொடர்பாக அரசு அங்கீகாரம் பெற்ற TVS நிறுவனத்திடம் உரிய அரசு விதிகளைப்பின்பற்றி பணிகள் மேற்கொள்ளவும் தகுதிச்சான்று FC எடுக்கவும் உரியமேல் நடவடிக்கை எடுக்குமாறு ஓட்டுனர் மற்றும் துப்புரவு ஆய்வாளர் 6–8–2018ம் தேதியில் குறிப்பு வழங்கியுள்ளார்கள். அதன்டிப்படையில் இவ்வலுவலக மேற்கோள் அறிவிப்புக் கடிதம் ந.க.எண்.2736/2016/எச்1/நாள்.10.9.2018 மூலம் மேற்கண்ட வாகனத்திற்கு தகுதிச்சான்று பெறும் பொருட்டு (FC) பழுது நீக்கப்பணிகள் மேற்கொள்ள அரசு அங்கீகாரம் பெற்ற தேனி TVS பணிமனைக்கு மேற்கோள் பெற அறிவிப்பு அனுப்பி வைக்கப்பட்டது.

TVS பணிமனை தேனி நிறுவனத்தின் 18–1–2019ம் தேதிய மேற்கோள் கடிதத்தில் மேற்கண்ட TN-57-W-9634 டம்பர் பிளேசர் வாகனத்திற்கு பழுது நீக்கப்பணிகள் மேற்கொள்ள செலவினத் தொகையாக ரூ.3,35,310/– க்கு (ரூபாய் மூன்று இலட்சத்தி முப்பத்தி ஐந்தாயிரத்தி முன்னூற்றிப்பத்து மட்டும்) மதிப்பீட்டு பட்டியல் வரப்பெற்றுள்ளது.

TN-57-W-9634 டம்பர்பிளேசர் வாகனம் புதிதாக வாங்கப்பட்டு 12 ஆண்டுக்ளுக்கும் மேல் ஆகிவிட்டது. மேலும் நாளொன்றுக்கு சராசரியாக 200 கிலோ மீட்டர் வீதம் இயக்கப்பட்டு 12 ஆண்டுகளில் சுமார் 8 இலட்சம் கிலோ மீட்டருக்கு மேல் இயக்கப்பட்டுள்ளது. மேலும் நகர்பகுதிகளில் இருந்து நகராட்சிக்கு சொந்தமான உரக்கிடங்கு 20 கி.மீ தூரத்தில் உள்ளது. இந்த தூர சாலைகள் முழுவதும் குண்டும் குழியுமாகவும் மேடுபள்ளங்களாகவும் உள்ளதாலும் வாகனம் குப்பைத் தொட்டிகளை எடுத்துச்செல்லும் வாகனமாக உள்ளதாலும் குப்பைத்தொட்டிகளை வைக்கப்பட்டுள்ள இடங்கள் ஏற்ற இறக்கம் உள்ள இடங்களாக உள்ளதாலும் வாகனத்தின் ஜாக்கிகளை ஏற்றி இறக்கும் போது வாகனம்

அடிக்கடி பழுது ஏற்பட்டு வருகிறது. எனவே வாகனம் வாங்கப்பட்டு அதிக வருடங்கள் ஆகிவிட்டதாலும், சாலைகள் குண்டும் குழியுமாக உள்ளதாலும், வாகனத்தில் பழுதுகளும் அதிகமாக ஏற்படுகிறது.

மேலும் எதிர்வரும் ஏப்ரல், மே மாதங்களில் கோடை சீசன் துவங்க உள்ள நிலையில் சுற்றுலா பயணிகளின் வருகையும் அதிகமாக இருப்பதுடன் நகரில் சேகரமாகும் குப்பைகளின் அளவும் அதிகமாக இருக்கும். எனவே நகரில் சேகரமாகும் குப்பைகளை உடனுக்குடன் அகற்றி நகரினை துாய்மையாக பராமரிக்க வேண்டி Tn-57-W-9634 டம்பர் பிளேசர் வாகனத்தை பழுது நீக்கப்பணிகள் மேற்கொண்டு வாகனத்தை இயக்க செய்வதற்கு ஆகும் செலவுத்தொகை ரூ.3,35,310/—ஐ (ரூபாய் மூன்று இலட்சத்தி முப்பத்தி ஐந்தாயிரத்தி முன்னூற்றிப்பத்து மட்டும்) நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : பொது மக்களின் சுகாதார நலன் கருதி பொது சுகாதாரப் பிரிவு குப்பை அள்ளும் வாகனத்தின் பழுது நீக்கப் பணிகளை அரசு அங்கீகாரம் பெற்ற TVS அய்யங்கார் நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளவும் அதற்கான செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.2738/2018/எச்1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **603, நாள்.28.02.2019.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்படுகிறது.** |

*******

12) இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் துப்புரவுப் பணிக்கு குப்பைகள் அகற்றப் பயன்படுத்தப்பட்டு வரும் TN 57 AU 3416 டிப்பர் லாரிக்கு புதிதாக டயர்கள் வாங்கி பொருத்தி மூன்று ஆண்டுகளுக்கும் மேல் ஆகிவிட்டது. மேலும், கடந்த மூன்று ஆண்டுகளில் நாளொன்றுக்கு சுமார் 60 கி.மீ வீதம் வாகனம் இயக்கப்பட்டு சராசரியாக 50,000 கி.மீ துாரம் வரை இயக்கப்பட்டு டயர்கள் அனைத்தும் தேய்ந்தும் கீரல் விழுந்தும் காணப்படுகிறது. தற்போது இவ்வாகனத்தை இயக்குவதில் சிரமம் ஏற்படுவதுடன் எரிபொருள் செலவினமும் அதிகமாக ஏற்படுகிறது.

மேலும், எதிர்வரும் ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் கோடை சீசன் துவங்க உள்ள நிலையில் சுற்றுலா பயணிகளின் வருகையும் அதிகமாக இருக்கும். இந்நகர் பகுதிகளில் சேகரமாகும் குப்பைகளை உடனுக்குடன் அகற்றி நகரினை துாய்மையாக பராமரிக்க வேண்டியுள்ளதால் TN 57 AU 3416 டிப்பர் வாகனத்தினை சுணக்கமின்றி இயக்க வேண்டியுள்ளது. மேற்கண்ட வாகனத்திற்கு ஆறு எண்ணம் புதிய டயர்கள் வாங்கி வழங்க வேண்டி துப்புரவு ஆய்வாளர் குறிப்பு அளித்துள்ளார். பொது சுகாதார நலன் கருதி அரசு அங்கீகாரம் பெற்ற டி.வி.எஸ் நிறுவனத்திலிருந்து ஆறு டயர்கள் புதிதாக வாங்கிக் கொள்வதற்கும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.75,000/— (ரூபாய் எழுபத்தைந்தாயிரம் மட்டும்) வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :
1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) பொது சுகாதார நலன் கருதி வாகன செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.3369/2016/எச்.1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **604, நாள்.28.02.2019.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

13) இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் துப்புரவு பணிக்கு 2019—2020ம் ஆண்டிற்கு தேவைப்படும் லெமன்கிராஸ் வாங்குவதற்கு நகர்மன்ற தீர்மான அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் முகவரி | லிட்டர் 1க்கான விலை ரூ. |
|---|---|---|
| 1 | சிவசக்தி டிரேடர்ஸ்,<br>7/4, செல்லான்டி அம்மன் கோவில் தெரு, கோட்டை,<br>நாமக்கல் — 637001. | ரூ.2900/— (ரூபாய் இரண்டாயிரத்து தொள்ளாயிரம் மட்டும்) |
| 2 | ஸ்ரீ பிளாஸ்டோ டெக்,<br>31/1, 6வது மெயின் ரோடு, திருமுடிவாக்கம், சென்னை—600 044. | ரூ.2950/— (ரூபாய் இரண்டாயிரத்து தொள்ளாயிரத்து ஐம்பது மட்டும்) |

வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள சிவசக்தி டிரேடர்ஸ் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள சிவசக்தி டிரேடர்ஸ் ஒப்பந்தப் புள்ளியை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.1051/2018/எச்.1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **605, நாள்.28.02.2019.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அலுவலகக் குறிப்பு ஏற்கப்படுகிறது.** |

*******

14) கொடைக்கானல் நகராட்சி, வார்டு பி, பிளாக் 5, நகரளவு எண். 25 கே.ஆர்.ஆர். கலையரங்க வளாகத்தில் யாத்திரி நிவாஸ் அமைத்திட நவீன வசதிகளுடன் கூடிய யாத்ரி நிவாஸ் கட்டி, 22 ஆண்டுகளுக்கு (வடிவமைத்து, நிறுவி நிதியளித்து இயக்கி மற்றும் திருப்பித்தரும் அடிப்படையில்) முதலீடு செய்து அதன் மூலம் கிடைக்கும் வருவாயில் நகராட்சிக்கு பங்கு கொடுக்க முன் வருதல் (அரசு மற்றும் தனியார் பங்களிப்பு முறை) (PPP mode) நகராட்சிக்கு ஆண்டு வருவாய் ஏற்படுத்தும் வகையில் நிதி பொறுப்புணர்வு தயாரித்தலின் அடிப்படையில் 15.02.2019ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு 15.02.2019ம் தேதி மாலை 3.30 மணிக்கு ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் பிரிக்கப்பட்டது . நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரக மண்டல செயற்பொறியாளர் தலைமையிலான ஒப்பந்த கூர்ந்தாய்வுக்குழு 18.02.2019ல் கூட்டப்பட்டதில் தகுதியான ஒப்பந்தப்புள்ளிகளின் விலைவிகித ஒப்பந்தப்புள்ளி திறக்க முடிவுசெய்து 20.02.2019ம் தேதியில் விலைவிகித ஒப்பந்தப்புள்ளி பிரிக்கப்பட்டு ஒப்புநோக்கியதில்

| Sl. No | Name of the Bidders | EMD Details | Annuval Premium quoted (Rs.in Lakh) |
|---|---|---|---|
| 1 | M/s. Murali Ads & Publicities,<br>530, Karaikkal Road,<br>Kumbakonam – 612401 | EMD Security Deposit in City Union Bank, Palavathankattalai vide DD No. . 457312, Dt.14.2.19 for Rs.60000.00<br>and DD No :- 457311, Dt.14.2.19 for Rs.10000.00 for Processing Fee in favour of the Municipal Commissioner, Kodaikanal | Rs.22.50 |
| 2 | Thiru.P.Karuppiah,<br>Enginnering Contractor,<br>122, Kulanthiranpatti,<br>Karambakudi Taluk,<br>Pudukottai. | EMD Security Deposit in City Union Bank, Palavathankattalai vide DD No. . 106370 Dt.14.2.19 for Rs.60000.00<br>and DD No :- 106371 Dt.14.2.19 for Rs.10000.00 for Processing Fee in favour of the Municipal Commissioner, Kodaikanal | Rs.22.30 |

ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு 20.02.2019 அன்று மீண்டும் கூட்டப்பட்டு கூர்ந்தாய்வு செய்து மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் மேற்காணும் பணிக்கு M/s.Murali Ads & Publicities, Kumbakonam என்பவர் வருடாந்திர பிரீமியம் மேற்கொள்ள ரூ.22.50/– இலட்சம் அதிகமாக வழங்கியதை ஏற்க பரிந்துரை செய்துள்ளது. மன்றத்தின் அனுமதிக்கு கூட்டப்பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : 1. கூர்ந்தாய்வு குழு பரிந்துரையை ஏற்கலாம்.
2. வருடாந்திர பிரீமியம் ரூ. 22.50/– இலட்சம் அதிகமாக வழங்கியுள்ள M/s. Murali Ads & Publicities, Kumbakonam என்ற நிறுவனத்தினை அனுமதிக்கலாம்.
(கோப்பு ந.க.எண். )

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **606, நாள்.28.02.2019.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்படுகிறது.** |

******

15) கொடைக்கானல் நகராட்சிக்குட்பட்ட கவி தியாகராசர் சாலையில் ஆட்டி மனை புதியதாக அமைப்பதற்கு இடைவெளி நிரப்புதல் நிதி 2007–2008 ன் கீழ் ரூ.. 65.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைப்பதற்கு சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை கடிதம் ந்.க.எண். 4168/2009/பி3 நாள். 20.02.2009 ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. ( மானியம் ரூ. 40.00 இலட்சம் + பொது நிதி ரூ. 25.00 இலட்சம் ). தலைமைப் பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 8625–6/2009/வி.ஏ.1 நாள். 10.06.2009 ல் தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டு 15.06.2009ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்திருந்த

திரு.எஸ்.இ.முகமது ரசூல் ஒப்பந்ததாரருக்கு இந்நகர்மன்றத் தீர்மானம் எண். 1096, நாள். 23.6.2009 ன்படி 12.10.2009 ல் பணி உத்திரவு வழஙகப்பட்டு பணி லிண்டல் மட்டம் வரை நடைபெற்று வந்த நிலையில் கவி தியாகராசர் சாலையில் ஆடடி மனை அமைக்கக் கூடாது என தடை உத்திரவு கோரி சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் வழக்கு தொடரப்பட்டிருந்தது.

சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை நீதிப்பேராணை மனு எண்.W.P(MD) No.12968/2017,நாள்.03.08.2017 உத்தவின்படி வேறு இடத்தில் ஆடடி மனை அமைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

அதன்படி, தற்போது வார்டு டி, பிளாக் 3, நகரளவு எண். 40, அண்ணாசாலை பழைய மார்க்கெட் பின்புற பகுதியில் போதுமான இடம் உள்ளதால் இவ்விடத்தில் புதிய ஆடடி மனை அமைக்க இடம் தேர்வு செய்யப்பட்டு, ரூ. 150.00 இலட்சத்தில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு அதன்படி வார்டு டி, பிளாக் 3, நகரளவு எண். 40, அண்ணாசாலை பழைய மார்க்கெட் பின்புற பகுதியில் புதிய ஆடடி மனை அமைப்பதற்கு நகர்மன்றத் தீர்மானம் எண். 481 நாள். 5.10.2018 ல் மன்ற ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாக மண்டல செயற்பொறியாளர், மதுரை அவர்களின் 06.02.2019 ம் தேதிய ஆய்வு குறிப்பின்படி மேற்படி இடத்தில் புதியதாக ஆடடி மனை அமைத்திட இடம் ஸ்தல ஆய்வு அளவு மேற்கொண்டதில் மேற்படி இடத்தில் புதியதாக ஆடடி மனை அமைக்க 440.04 ச.மீட்டர் இடம் தேவை. தற்போது உள்ள இடத்தில் பழுதடைந்த மற்றும் ஏலம் போகாத சுமார் 5+5 கான்கிரிட் மேற்கூரை அமைப்புடைய ரோலிங சட்டர் ஏதும் இல்லாது திறந்த வெளியாக உள்ள வரைபடத்தில் அளவு குறிப்பிட்டுள்ள கடைகளையும், உபயோகமற்ற நிலையில் பழுதடைந்த நிலையில் கீழ்க்கண்ட கட்டுமானஙகள் உள்ளன.

| | | | |
|---|---|---|---|
| அ) | கடையின் அளவு | 19.20m x 4.30m | = 82.56 sqm |
| | | 12.60m x 7.10m | = 89.46 sqm |
| | | | 172.02 Sqm |
| ஆ) | கழிப்பிடம் | 7.10m x 3.20m | = 22.72 sqm |
| இ) | பழுதடைந்த தகர ரூப் கொண்ட மீன் கடை | 6.90m x 2.50m | = 17.25 sqm |
| ஈ) | பழுதடைந்த தகர ரூப் கொண்ட மட்டன் கடை | 6.00m x 3.00m | = 18.00 sqm |
| | மொத்தம் இடிக்க வேண்டிய அளவு | | = 229.98 sqm |

மேற்கண்ட விபரப்படி கட்டிடஙகளை இடித்து அப்புறப்படுத்தினால் 229.98 ச.மீட்டர் இடம் கிடைக்கும். எனவே மேற்கண்ட விவரப்படி கட்டிடஙகளை இடித்து அப்புறப்படுத்தினால் மொத்தம் கிடைக்கும் காலி இடம் 440.04 ச.மீ கிடைக்கும். இவற்றில் புதியதாக ஆடடிமனை அமைக்க 319.00 ச.மீ அளவு இடம் தேவை. எனவே, மேற்கண்ட கட்டிடங்களை இடித்து அப்புறப்படுத்தி, வார்டு டி, பிளாக் 3, நகரளவு எண். 40, அண்ணாசாலை பழைய மார்க்கெட் பின்புற பகுதியில் ஆடடி மனை அமைத்திடவும், அதற்காக தயார் செய்யப்பட்டுள்ள திருத்திய மதிப்பீடு ரூ.130.00 இலட்சத்திற்கு (ரூபாய் நூற்று முப்பது இலட்சம் மட்டும் ) அனுமதியும், இத்தொகையினை மானியமாக வழஙக கோரியும், நிர்வாக அனுமதி பெறும் கோரியும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு பிரேரணை அனுப்பிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>: 1) வார்டு டி, பிளாக் 3 நகரளவு எண். 40 ல் ஏற்கனவே ஆடு/மாடு இறைச்சி கடைகள் உள்ளதாலும், இப்பகுதியிலேயே புதிய ஆடடி மனை அமைப்பதால் பொதுமக்களிடம் இருந்து எந்த எதிர்ப்பும் வராது என்பதினாலும், மேற்கண்ட இடத்திலேயே திருத்திய மதிப்பீட்டில் புதிய ஆடடி மனை அமைத்திட மன்றம் அனுமதிக்கலாம்.
2) பழைய மார்க்கெட் பகுதியில் பழுதுடைந்துள்ள கழிப்பறை மற்றும் ஏலம் போகாத ரோலிங் சட்டர் இல்லாத கடைகள் கட்டிடத்தினை இடித்திடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **607, நாள்.28.02.2019.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்படுகிறது.** |

ஒம்/—ரா.முருகேசன்,
தனி அலுவலர்,
கொடைக்கானல் நகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையாளர்,
கொடைக்கானல் நகராட்சி.